**காணி அபிவிருத்திச் சட்டம்**

320 ம் அத்தியாயம்

காணி அபிவிருத்திச் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின் கீழ் விவசாய, காணி அமைச்சரால் திரு. எச். ஜயசூரிய அவர்கள் தமது சேவைகளுக்கு மேலதிகமாக அம்பாரை மாவட்ட காணி அதிகாரியாக 1972.1.1 திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

எஸ். பி. சேனநாயக்க,
மேலதிக செயலாளர்,
விவசாய, காணி அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆு நவெம்பர் மீ 27 ந உ.

1–19

---

**விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

பொருள் கோடற் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 2) 12 ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அதிகாரம் 173) 2 ம் பிரிவின் கீழ் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் :—

(1) திரு. செல்லையா சண்முகம் அவர்களின் (உணவும் நானுவிதப் பொருட்களும்) உதவி விலைக்கட்டுப்பாட்டாளர் நியமனத்தை 1972 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ந் திகதி தொடக்கம் நீக்கி,

(2) மேற்கூறப்பட்ட திகதி தொடக்கம் திரு. அரம்பே கம்லத்தலாகே பிரேமசிங்க அவர்களை, அவரது மற்றைய கடமைகளுடன் தீவு முழுவதற்கும் (உணவும் நானுவிதப் பொருட்களும்) உதவி விலைக் கட்டுப்பாட்டாளராக நியமித்துள்ளார்.

**நிறைகள் அளவுகள் கட்டளைச் சட்டம்**

1971 ம் ஆண்டின் 7 ம் இலக்க நிறைகள் அளவுகள் (திருத்தம்) கட்டளைச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட நிறைகள் அளவுகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 (1) (பீ) யின் கீழ் தமக்கு அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களைக் கொண்டு வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் :—

(1) திரு. செல்லையா சண்முகம் அவர்களின் நிறைகள், அளவுகள் அத்தியட்சகர் நியமனத்தை 1972 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 11 ம் திகதி தொடக்கம் நீக்கி,

(2) மேற்கூறப்பட்ட திகதி தொடக்கம் திரு. அரம்பே கம்லத்தலாகே பிரேமசிங்க அவர்களை அவரது மற்றைய கடமைகளுடன் தீவு முழுவதற்கும் நிறைகள், அளவுகள் அத்தியட்சகராக நியமித்துள்ளார்.

வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர் :—

(1) IV ஆம் வகுப்புக் கணக்காளரான திரு. செல்லையா சண்முகம் அவர்களின் இறக்குமதி ஏற்றுமதி உதவிக் கட்டுப்பாட்டாளர் நியமனத்தை 1972 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆந் திகதி தொடக்கம் நீக்கி,

(2) வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சின் IV ஆம் வகுப்புக் கணக்காளரான திரு. அரம்பே கம்லத்தலாகே பிரேமசிங்க அவர்களை அவரது சொந்தக் கடமைகளுடன் மேற்கூறப்பட்ட திகதி தொடக்கம் இறக்குமதி ஏற்றுமதி உதவிக் கட்டுப் பாட்டாளராக நியமித்துள்ளார்.

ஜயந்தா கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

கொழும்பு 3,
1972 ம் ஆு நவம்பர் மீ 19 ந உ.

1–96

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. பிஎல் 1/72 ஆட்டிறைச்சி

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

173 ஆம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்டி ருக்கும் தத்துவங்களைக் கொண்டு பொலன்னறுவ பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) ஷேர்லி ரெஜினால்ட் வில்லியம் பெரேரா அமரசிங்க ஆகிய நான் இக்கட்டளையால் —

(1) 1970 ம் ஆண்டு ஜுலை மாதம் 19 ம் திகதி வெளியான 14,915/3 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1970 ம் ஆண்டு ஜுலை மாதம் 16ம் திகதி கொண்ட பி–எல் 1/70 இலக்க கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடு இருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே ஒரு இறுத்த லுக்குரிய ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட இந்த விலைக ளுக்குக் கூடுதலாக, அட்டவணையின் தலைப்பில் குறிக்கப்பட்டி ருக்கும் இடங்களுக்குள் விற்றலாகாது எனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) " ஆட்டிறைச்சி " என்றுல் செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் மாமிசத்தைக் குறிப்பதாகும், எல்லா விதிமான கழிவுகளும் தவிர்ந்ததுமாகும்,

(ஆ) விற்பனைக்குத் தயாராக ஆடடிக்கும் தொட்டியிலிருந்து செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் சடலம் (தலை, தோல், குடல், குளம்புகள் முற்றும் எல்லா வகையான வழமையாகக் கழிக்கப்படுபவைகள் தவிர்ந்த) மற்றவை விற்பனை செய்யப்பட்டால் அது " உயரற்ற நிறையாக " கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்,

(4) ஆட்டிறைச்சி எலும்புடன் விற்குமிடத்து, எலும்புகள் நிறை மொத்தமாக விற்கப்படும் நிறையின் 25 சத வீதத்திற்கு மேற்படல் ஆகாது என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சியை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது பாத்திரத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ்வாகனதில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) ஆட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின் ஆட்டிறைச்சிக் கழிவுகளில் இருந்து வேருக நிறுத்து விற்கப்படல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சி விற்கும் பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ தராசுகளையோ ஆட்டிறைச்சி வாங்குவோர் கேட்குமிடத்து தாம் வாங்கும் ஆட்டிறைச்சியின் உண்மையான நிறையைப் பார்க்கக் கூடிய இடத்தில் வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சியை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்கப்பட்ட இறைச்சியின் அளவும் (நிறையில்),

(இ) விற்பனை செய்யப்பட்ட ஆட்டிறைச்சியின் விபரமும்,

(ஈ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் அளவுக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(9) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறு எந்த இறைச்சியுடனும், மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளை சுற்றிக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(11) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1972 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் திகதி காலை 9 மணிக்கு பொலன்னறுவைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். ஆர். டபிளிவ். பி. அமரசிங்க,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
பொலன்னறுவை மாவட்டம்.

அட்டவணை

| பந்தி 1 | பந்தி 2 | பந்தி 3 |
|---|---|---|
| இடப்பரப்பு | ஆட்டிறைச்சி (எலும்பில்லாமல்) 1 இறுத்தலுக்கான ஆகக்கூடிய விலை | ஆட்டிறைச்சி (எலும்புடன்) 1 இறுத்தலுக்கான ஆகக்கூடிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| பொலன்னறுவை பரிபாலனமாவட்டம் | 2 75 .. | 2 60 |

குறிப்பு : மேற்குறித்த விலைகள் ஒரு இருத்தல் ஆட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலைகளாகும். இவற்றிற்கு மேலதிகமாக விற்கப்படலாகாது.

1–43/1

உணவு விலைக்கட்டளை இலக்கம் 2/72 மாட்டிறைச்சி

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களைக் கொண்டு பொலன்னறுவை பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஷேர்லி ரெஜினல்ட் விலியம் பெரேரா அமரசிங்க ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 19 ம் திகதி வெளியான 14,915/3 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ந் திகதி கொண்ட பிஎல் 2/70 இலக்க கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகள் முறையே அப்பந்திகளின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட விபரத்தையும் தரத்தையும் உடைய மாட்டிறைச்சி ஒரு இருத்தல் அட்டவணையில் அவற்றிற்கமைய 1 ம் பந்தியில் சொல்லப்பட்ட இடங்களில் அதற்கு மேல் விற்கப்படலாகா ஆகக்கூடிய விலையாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) " மாட்டிறைச்சி " என்னும் கூற்று மாட்டினதும் அல்லது எருமை மாட்டினது சதை எவ்வகையான கழிவுப் பொருளையும் உள்ளடக்காது எனவும்,

(ஆ) எம்மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்டபடி (தலை, தோல், குளம்புகள், குடல் கழிவுகள் மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லா கழிவுப் பொருட்களும் தவிர) விற்கப்படும் பொழுது அவ்விற்பனை உயிரற்ற நிறையில் விற்பனையாகக் கருதப்பட வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(4) மாட்டிறைச்சி எலும்புகளுடன் விற்கப்படுமிடத்து அதனுடன் சேர்ந்த எலும்பின் நிறை விற்கப்படும் மொத்த நிறையின் 25 சதவீதத்திற்கு மேற்படலாகாது என்றும் கட்டளையிடுகிறேன்.

(5) இதற்குள்ள அட்டவணையில் 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் எவ்விடத்திலேனும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியைத் தம் வசத்தில் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ்விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்கவேண்டுமென கட்டளையிடுகிறேன்.

(6) மாட்டிறைச்சி விற்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில் மாத்திரம் மாட்டிறைச்சி விற்கவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கவோ வேண்டுமென்றும் இக்கடைகளில் குறிப்பிட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியின்றி வேறெந்தவகையான இறைச்சியும் விற்கக்கூடாதெனவும் கட்டளையிடுகிறேன்.

(7) அட்டவணையில் 1 ம் பந்தியில் குறிப்பிட்ட இடப்பரப்பினுள்ள எவ்விடத்திலாவது குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருக்கும் வியாபாரி ஒவ்வொருவரும் அத்தகைய மாட்டிறைச்சி விற்கப்படும் அக்கடையில் அத்தகைய விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சி மட்டுமே விற்கப்படுகின்றது என்னும் பொருள் கொண்ட அறிவித்தல் ஒன்று பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்.

(8) ஒரு விற்பனையில் எலும்புடனோ எலும்பில்லாமலோ மாட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின் மாட்டிறைச்சி எலும்புடனோ எலும்பில்லாமலோ கழிவுகளிலிருந்து வேருக நிறுத்து விற்கப்படல் வேண்டுமென கட்டளையிடுகிறேன்.

(9) ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி விற்கும் பொழுது ஒருவர் மாட்டிறைச்சி கேட்டால், கழிவுகள் இல்லாத மாட்டிறைச்சியாக விற்க வேண்டுமெனவும் கட்டளை இடுகிறேன்.

(10) ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி விற்கும் பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசை வாங்குபவர் தாம் வாங்கும் மாட்டிறைச்சியின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய விதமாக வைத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(11) இதற்குள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் நிறை,

(இ) விற்பனைசெய்யப்பட்ட மாட்டிறைச்சியின் விபரம்,

(ஈ) விற்கப்பட்ட மாட்டிறைச்சிக்கு கொடுக்கப்பட்ட விலை.

(12) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறெந்த இறைச்சியுடனும் மாமிசத்துடனும் கலந்து விற்றலாகாது எனக் கட்டளையிடுகிறேன்.

(13) குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம் 3 ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக் கூடிய விலைகள் அவ்வாறு விற்கப்படும் பொருளை சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் அடக்கியிருத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(14) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது நிறுத்தலளவை முறையின் " அவர்டுபோஸ் " பிரமாண இருத்தலாகக் கருதப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

1972 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் திகதி காலை 9 மணிக்கு பொலன்னறுவைக் கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

எஸ். ஆர். டபிளிவ். பி. அமரசிங்க,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு)
பொலன்னறுவை மாவட்டம்.

அட்டவணை

| பந்தி 1 இடப்பரப்பு | பந்தி 2 மாட்டிறைச்சி (எலும்பில்லாமல்) 1 இருத்தல் ஆகக்கூடிய விலை | | பந்தி 3 மாட்டிறைச்சி (எலும்புடன்) 1 இருத்தல் ஆகக்கூடிய விலை | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| பொலன்னறுவை பரிபாலன மாவட்டம் | 1 | 10 | 1 | 00 |

**குறிப்பு.**—மேற்குறித்த விலைகள் 1 இருத்தல் மாட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலைகளாகும். இவற்றிற்கு மேலதிகமாக விற்கப் படலாகாது.

1—43/2

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## 1967–68 ஆம் நிதிவருட அரசாங்க சேவைச் சகாயநிதி நிருவாக சபையின் நிர்வாக அறிக்கை

**நிர்வாகம்.**—இவ்வருடத்தில் இந்நிதி நிதியமைச்சின் கீழ் இயங்கியது. 1946 ஆம், 1947 ஆம் இலங்கை (அரசியலமைப்பும் சுதந்திரமும்) கட்டளைச் சட்டத்தின் 46 (4) ஆம் பிரிவின் கீழும், 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆம் திகதிய 14,908/6 என இலக்கமிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம், இந்நிதியின் நிர்வாகம் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி தொடக்கம் பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டது. இப்பணி ஒதுக்கலின் காரணமாக ஒய்வூதியப் பணிப்பாளர் இந்நிதி நிருவாக சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்நிர்வாக அறிக்கை பற்றிய வருடத்தில் இந்நிதியின் நிர்வாகம், பின்வருவோரைக் கொண்ட நிர்வாக சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டது :—

1. திறைசேரிப் பிரதிச் செயலாளர் (தலைவர்)
2. சொலிசிற்றர் ஜெனரல்
3. தொழிற் திணைக்கள ஆணையாளர்
4. பிரதி நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர்
5. திரு. டீ. சீ. லெல்வெல

**ஊழியர்.**—அனுமதிக்கப்பட்ட ஊழியர் கோப்பு 49. இதில் இவ்வருடம் எவ்வித மாற்றமுமேற்படவில்லை.

**உதவுநர் கொடுப்பனவு.**—இவ்வருடம் 7,572 அளிப்புகள் செய்யப்பட்டன. சென்ற வருடம் செய்யப்பட்ட அளிப்புகள் 7,936 ஆகும். இந் நிதியின் வெவ்வேறு விதிகளின் பிரகாரம் இவ்வருடத்தில் செய்யப்பட்ட அளிப்புகளின் விபரம் பின்வரும் வகையில் அமைந்துள்ளன :—

| | |
|---|---|
| 14 ஆம் பிரிவு—இறப்பு, ஓய்வுபெறல், பதவி ஒழிக்கப்பட்டமை .. .. | 563 |
| 16 ஆம் பிரிவு—வேலைநீக்கம், பதவியை விட்டுவிடல் .. .. .. | 194 |
| 20 ஆம் பிரிவு—ஓய்வூதிய நிலைக்கு நியமிக்கப்படல் .. .. .. | 6,573 |
| — பிழையான அறவிடுதல் .. .. .. | 242 |
| | 7,572 |

**நிர்வாகச் செலவு.**—மேற்கூறப்பட்ட நிதியாண்டில், இந்நிதியின் நிர்வாகச் செலவு ரூபா 2,30,557. சென்ற வருடம் இச்செலவு ரூபா 2,48,714 ஆகும். இச்செலவுகள் இந்நிதியால் பொறுக்கப்பட்டன.

**வருடாந்தக் கணக்கு.**—கணக்காய்வு செய்யப்பட்ட, 1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவடைந்த நிதியாண்டின் வரவு செலவுக் கணக்கு, வருமான ஒதுக்கீட்டுக் கணக்கு, அத்திகதிய ஐந்தொகை, இக்கணக்குப் பற்றிய கணக்காய்வுத் தலைமையதிபதியின் அறிக்கை, கணக்காய்வுத் தலைமையதிபதியின் அறிக்கை பற்றி நிர்வாக சபையின் விதப்புரைகள் ஆகியன இவ்வறிக்கையின் " அ " அனுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

**வட்டி கொடுப்பனவு.**—உதவுநர்களின் கணக்கு மீது இவ்வருடம் 3½ வீத வட்டி வழங்குவதற்கு நிர்வாகசபை அனுமதித்துள்ளது. சென்ற வருடமும் அளிக்கப்பட்ட வட்டி இதே வீதமாகும்.

டபிள்யூ. சந்திரசேன,
செயலாளர்.

லெனட் பனம்பலன,
தலைவர்.

1972 ம் ஆண்டு நொவம்பர் மீ 13 ந் வ.

அனுபந்தம் " அ "

## அரசாங்க சேவைச் சகாயநிதி

### 1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவடைந்த நிதி ஆண்டின் வரவு செலவுக் கூற்று

**வரவு**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| 1.10.67 இல் திறைசேரிப் பிரதிச் செயலாளரிடம் கையிருப்பு .. | | 44,63,821 56 |
| கட்டாய உதவுதொகை .. | 19,01,994 93 | |
| தன்னிச்சை உதவுதொகை .. | 41,050 68 | |
| | | 19,43,045 61 |
| அரசினர் உதவுதொகை .. | | 34,50,000 0 |
| இலங்கை அரசாங்கக் கடன் முதலீட்டால் பெற்ற வட்டி .. | | 25,38,542 02 |
| தொங்கு கணக்கால் (தவறான வரவு) .. .. | | 61,918 57 |
| | | 1,24,57,327 76 |

**செலவு**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| இலங்கை அரசாங்கக் கடனில் முதலீடுகள் .. .. | | 30,00,000 0 |
| கொடுப்பனவுகள்— | | |
| கட்டாய உதவுதொகை .. | 21,75,771 95 | |
| தன்னிச்சை உதவுதொகை .. | 32,754 94 | |
| அரசினர் உதவுதொகை .. | 2,72,947 92 | |
| | | 24,81,474 81 |
| அரசிறைக்கு மாற்றப்பட்ட உதவுநருக்குக் கொடுபடாத அரசினர் உதவுதொகையும், வட்டியும் .. | | 39,21,343 20 |
| தொங்கு கணக்கால் (தவறான செலவுகள்) .. | | 58,123 74 |
| 1968.09.30 தி. பி. செ. இடம் கையிருப்பு .. .. | | 29,96,386 01 |
| | | 1,24,57,327 76 |

### 30.9.68 இல் முடிவடைந்த நிதி ஆண்டின் வருமான ஒதுக்கீட்டுக் கணக்கு

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| ஒதுக்கிய வட்டி 3½ வீதப்படி : | | |
| கட்டாய உதவுதொகை .. | 8,23,221 46 | |
| தன்னிச்சை உதவுதொகை .. | 9,803 22 | |
| வெகுமதிக் கணக்கு .. | 13,03,580 66 | |
| | | 21,36,605 34 |
| 1967/68 இல் நிருவாகச் செலவு .. | | 2,02,455 67 |
| 1967/68 இல் கணக்காய்வுச் செலவு | | 28,101 11 |
| தளபாட, இயந்திர பெறுமானத் தேய்வு .. .. | | 1,904 70 |
| ஒதுக்கப்படாத மீதி, மறு வருடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது | | 1,02,750 12 |
| | | 24,71,816 94 |

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| சென்ற ஆண்டின் மிகுதி .. | | 79,921 32 |
| பெற்ற வட்டி .. .. | 25,38,542 02 | |
| கழிக்க | | |
| 67/68 இல் பெற்ற சென்ற வருட வட்டி .. .. | 7,98,813 75 | |
| | 17,39,728 27 | |
| கூட்டுக | | |
| வட்டி வருமதி .. | 6,52,167 35 | |
| | | 23,91,895 62 |
| | | 24,71,816 94 |

### 1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் தேதிய ஐந்தொகை

**பொறுப்புக்கள்**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| உதவுநர் கணக்கில் வட்டியுடன் இருக்கும் தொகை— | | |
| கட்டாய .. ... | 2,44,25,750 28 | |
| தன்னிச்சை .. .. | 2,95,643 26 | |
| வெகுமதி .. .. | 4,26,27,198 91 | |
| | | 6,73,48,592 45 |
| வருமான ஒதுக்கீட்டுக் கணக்கு .. | | 1,02,750 12 |
| முதலீட்டு ஒதுக்கு .. | | 9,112 50 |
| **செல்மதி** | | |
| திறைசேரிப் பிரதிச் செயலாளர் : | | |
| 1967/68 இன் நிருவாகச் செலவு .. .. | 2,02,455 67 | |
| 1967/68 இன் கணக்காய்வுச் செலவு .. .. | 28,101 11 | |
| 1966/67 இன் நிருவாகச் செலவு .. .. | 2,25,683 22 | |
| 1966/67 இன் கணக்காய்வுச் செலவு .. .. | 22,320 27 | |
| 1965/66 இன் கணக்காய்வுச் செலவு .. .. | 23,031 78 | |
| | | 5,01,592 05 |
| தொங்கு கணக்கு .. | | 9,237 79 |
| | | 6,79,71,284 91 |

**சொத்துக்கள்**

| | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| முதலீடுகள் கொள் விலைப்படி (30.9.68 இல் மத்திய சந்தைப் பெறுமதி ரூ. 5,92,82,112.30) | | 6,43,05,589 25 |
| இயந்திராதியன தளபாடம் கொள் விலையில் .. .. | 23,507 70 | |
| கழிக்க | | |
| பெறுமானத் தேய்வு ஒதுக்கம் .. | 6,365 40 | |
| | | 17,142 30 |
| வருமதி | | |
| பொதுபடுகடன் பதிவாளர் .. | | 6,52,167 35 |
| திறைசேரிப் பிரதிச் செயலாளரிடம் உள்ள உரொக்கம் .. | | 29,96,386 01 |
| | | 6,79,71,284 91 |

டபிள்யூ. சந்திரசேன,
அரசாங்க சேவைச் சகாய நிதி நிருவாக சபைச் செயலாளர்.

லெனுட் பனம்பலன,
ஓய்வூதியப் பணிப்பாளரும், அரசாங்க சேவைச் சகாய நிதி நிருவாக சபைத் தலைவரும்.

கொழும்பு,
1972 ம் ஆண்டு சனவரி மீ 31 ந உ.

1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவடைந்த நிதி வருடத்தைய அரசாங்க சேவைச் சகாயநிதியின் கணக்குகள், அரசாங்க சேவைச் சகாயநிதிப் பிரமாணம் 24 (1) இன் (அத்தி. 434) பிரகாரம், என்னால் பரிசோதனை செய்யப்பட்டன. 1972 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதிய ஓ—3/ஆர்எஸ் பீ எப் (1967/68) இலக்க எனது அறிக்கையில், கூறப்பட்ட குறிப்புக்களுக்கமைய, 1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவடைந்த நிதிவருடத்தைய ஐந்தொகையும், மற்றும் அதனுடன் தொடர்பான நிதி அறிக்கைகளும் இந்நிதியின் நிதிநிலைமையையும், மற்றும் இவ்வருடத்தைய நடவடிக்கைகளின் பெறுபேறுகளையும் சீரான முறையில் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளனவென நான் அபிப்பிராயப்படுகிறேன்.

சி. சிவபாதசுந்தரம்,
கணக்காய்வுத் தலையமையதிபதிக்காக.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு 7,
1972 ஆம் ஆண்டு மே மாதம் 16 ந் திகதி

அனுபந்தம் " அ "

## அரசாங்க சேவைச் சகாயநிதி 1968.09.30 இல் இலங்கை அரசாங்கக் கடனில் மூலதன அட்டவணை

| | | விபரங்கள் | | | தோற்ற மதிப்பு ரூ. | ச. | சந்தை மதிப்பு ரூ. | ச. | கொள்விலை ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3½% | தேசியக் கடன் | | 1964/69 | 7,68,000 | 0 | 7,67,232 | 0 | 7,39,948 | 75 |
| 2. | 3% | தேசிய அபிவிருத்திக் கடன் | | 1965/70 | 20,40,500 | 0 | 20,13,973 | 50 | 20,04,140 | 50 |
| 3. | 3% | வெற்றிக் கடன் | | 1965/70 | 1,00,000 | 0 | 98,800 | 0 | 90,000 | 0 |
| 4. | 3% | இலங்கை அரசாங்கக் கடன் | | 1966/71 | 10,00,000 | 0 | 9,79,000 | 0 | 10,00,000 | 0 |
| 5. | 3% | ஷை | | 1969/72 | 20,00,000 | 0 | 19,44,000 | 0 | 20,00,000 | 0 |
| 6. | 2½% | தேசிய அபிவிருத்திக் கடன் | | 1967/72 | 20,00,000 | 0 | 19,06,000 | 0 | 20,00,000 | 0 |
| 7. | 3% | ஸ்ரீ லங்காக் கடன் | | 1969/74 | 12,50,000 | 0 | 12,01,250 | 0 | 12,50,000 | 0 |
| 8. | 3% | இலங்கை அரசாங்கக் கடன் | | 1972/77 | 15,00,000 | 0 | 13,57,500 | 0 | 15,00,000 | 0 |
| 9. | 3¼% | ஷை | | 1973/77 | 15,00,000 | 0 | 13,86,000 | 0 | 15,00,000 | 0 |
| 10. | 3% | ஷை | | 1973/78 | 12,50,000 | 0 | 11,21,250 | 0 | 12,50,000 | 0 |
| 11. | 3¼% | ஷை | (ஆ) | 1975/79 | 20,00,000 | 0 | 18,18,000 | 0 | 20,00,000 | 0 |
| 12. | 3¼% | ஷை | | 1975/79 | 20,00,000 | 0 | 18,12,000 | 0 | 20,00,000 | 0 |
| 13. | 3½% | ஷை | | 1976/80 | 40,00,000 | 0 | 36,55,000 | 0 | 40,00,000 | 0 |
| 14. | 3¼% | ஷை | | 1975/80 | 10,00,000 | 0 | 8,82,000 | 0 | 10,00,000 | 0 |
| 15. | 3¼% | ஷை | | 1976/81 | 10,00,000 | 0 | 8,80,000 | 0 | 10,00,000 | 0 |
| 16. | 4¾% | ஷை | | 1981/85 | 22,80,000 | 0 | 21,04,440 | 0 | 22,80,000 | 0 |
| 17. | 4¼% | ஷை | (ஆ) | 1981/85 | 17,20,000 | 0 | 15,85,840 | 0 | 17,20,000 | 0 |
| 18. | 4¼% | ஷை | | 1982/86 | 10,00,000 | 0 | 9,20,000 | 0 | 10,00,000 | 0 |
| 19. | 4¼% | ஷை | (ஈ) | 1982/86 | 20,00,000 | 0 | 18,30,000 | 0 | 20,00,000 | 0 |
| 20. | 4¼% | ஷை | (உ) | 1982/86 | 12,50,000 | 0 | 11,41,250 | 0 | 12,50,000 | 0 |
| 21. | 4¼% | ஷை | (எ) | 1982/86 | 20,00,000 | 0 | 18,24,000 | 0 | 20,00,000 | 0 |
| 22. | 4¼% | ஷை | (ஏ) | 1982/86 | 20,00,000 | 0 | 18,20,000 | 0 | 20,00,000 | 0 |
| 23. | 4¼% | ஷை | | 1983/87 | 5,00,000 | 0 | 4,53,500 | 0 | 5,00,000 | 0 |
| 24. | 4¼% | ஷை | (ஆ) | 1983/87 | 12,50,000 | 0 | 11,32,500 | 0 | 12,50,000 | 0 |
| 25. | 4¼% | ஷை | (ஊ) | 1983/87 | 30,00,000 | 0 | 27,00,000 | 0 | 30,00,000 | 0 |
| 26. | 4¼% | ஷை | (இ) | 1984/88 | 40,00,000 | 0 | 35,76,000 | 0 | 40,00,000 | 0 |
| 27. | 4½% | ஷை | (உ) | 1984/88 | 40,00,000 | 0 | 36,64,000 | 0 | 40,00,000 | 0 |
| 28. | 4½% | ஷை | (ஊ) | 1985/89 | 5,00,000 | 0 | 4,53,500 | 0 | 5,00,000 | 0 |
| 29. | 4½% | ஷை | (ஆ) | 1986/90 | 40,00,000 | 0 | 36,08,000 | 0 | 40,00,000 | 0 |
| 30. | 4½% | ஷை | (இ) | 1986/90 | 20,00,000 | 0 | 18,02,000 | 0 | 20,00,000 | 0 |
| 31. | 3% | தேசிய வீடமைப்புக் கடன் | | 1969/71 | 10,00,000 | 0 | 9,85,000 | 0 | 10,00,000 | 0 |
| 32. | 3¼% | ஷை | | 1970/72 | 10,00,000 | 0 | 9,84,000 | 0 | 10,00,000 | 0 |
| 33. | 4½% | இலங்கை அரசாங்கக் கடன் | (எ) | 1987/91 | 40,00,000 | 0 | 35,44,000 | 0 | 40,00,000 | 0 |
| 34. | 4½% | ஷை | (உ) | 1988/92 | 1,18,700 | 0 | 1,04,218 | 40 | 1,18,700 | 0 |
| 35. | 4½% | ஷை | (ஆ) | 1989/93 | 10,00,000 | 0 | 8,71,000 | 0 | 10,00,000 | 0 |
| 36. | 5½% | ஷை | (இ) | 1989/93 | 3,52,800 | 0 | 3,53,858 | 40 | 3,52,800 | 0 |
| 37. | 5½% | ஷை | (ஊ) | 1989/93 | 20,00,000 | 0 | 20,02,000 | 0 | 20,00,000 | 0 |
| | | | | | 6,43,80,000 | 0 | 5,92,82,112 | 30 | 6,43,05,589 | 25 |

அனுபந்தம் " அ "

எனது இல : ஓ–3/பீ எஸ் பீ எப் (67/68)

## 30.09.1968 இல் முடிவடைந்த நிதிவருடத்தில் அரசாங்க சேவைச் சகாயநிதிக் கணக்கின் மீதான கணக்காய்வுத் தலைமையதிபதியின் அறிக்கை

(இவ்வறிக்கையிற் குறிக்கப்பட்ட சதக் கணக்குகள் யாவும், அதன் மருவிய ரூபாவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன)

அரசாங்க சேவைச் சகாய நிதியின் 1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவடைந்த நிதிவருடத்திற்கான கணக்குகள் யாவும் அரசாங்க சேவைச் சகாய நிதி, பிரமாணம் 24 (1) இலக்க விதிகளுக்கமைய (அத். 434) எனது பணிப்பின் கீழ் பரிசோதனை செய்யப்பட்டன.

2. 1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முடிவடைந்த நிதிவருடத்திற்குரிய பின்வரும் அறிக்கைகள் கணக்குப் பரிசோதனை செய்வதற்காக அரசாங்க சேவைச் சகாய நிதிச் செயலாளரினால் 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டன.

(i) 30.09.68 இல் முடிவடைந்த நிதிவருடத்தின் பற்றுவரவுக்கணக்கு.

(ii) 30.09.68 இல் முடிவடைந்த நிதிவருடத்தின் வருமான ஒதுக்கீட்டுக் கணக்கு.

(iii) 30.09.68 ஆந் திகதிய ஐந்தொகை.

கணக்குப் பரிசோதனையின்போது கவனிக்கப்பட்டவை கீழ் தரப்பட்டுள்ளன :—

3. **கணக்கின் பெறுபேறு.**—வருமான ஒதுக்கீட்டுக் கணக்கின்படி இந்நிதியின் இவ்வருட வருமானம் ரூபா 23,91,896 ம், செலவு ரூபா 23,69,067 ஆகும். உதவுநர்க்கு அவர்களின் கணக்குகளின் மாதாந்த மீதிகளில் 3½ வீத வட்டி வீதம் ரூபா 21,36,605 கொடுக்கப்பட்டது. இந் நிதியின் நிருவாகச் செலவு, தளபாட சாதன பெறுமானத் தேய்வு ஆகியன ரூபா 2,32,462 ஆகும். இவ்வருடத்தின் தொழிற்படு பலாபலன் மீதி ரூபா 22,829 ஆகும். இத்தகைய மீதியைக் கணக்கிடும் பொழுது முந்திய 1963–1968 உள்நாட்டுப் பாதுகாப்புக் கடன் மூலம் ஏற்பட்ட நட்டமான ரூபா 8,750 கணக்கிடப்படவில்லை. ஆனால் இந்நட்டம் மூலதன ஒதுக்கீட்டுக் கணக்கில் கணக்கிடப்பட்டது. இந்த மீதியும், சென்ற வருட வருமான ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் கொண்டுவரப்பட்ட மீதி ரூபா 79,921 ம் சேர்ந்து ரூபா 1,02,750 ஆகும். இத்தொகையாகிய ரூபா 1,02,750 மறு வருடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

4. **வரவு செலவுக் கணக்கு—வரவு—அரசாங்க உதவுதொகை ரூபா 34,50,000.**—ஓர் நிதிவருடத்தில் உதவுநர்களால் கட்டாய உதவு தொகையாகக் கொடுக்கப்பட்ட கூட்டுத்தொகையின் ஒன்றரைப் பங்கை அந்நிதிவருட முடிவில் இந்நிதியின் பொது நிதிக்குத் திறைசேரிப் பிரதிச் செயலாளர் வரவு வைக்கவேண்டுமென, அரசாங்க சேவைச் சகாயநிதி பிரமாணங்களின் 7 (1) பிரிவு கூறுகின்றது. இவ்வருடம் கட்டாய உதவு தொகையாகப் பெற்ற முழுத் தொகை ரூபா 19,01,995 ஆகும்.

இத்தொகைக்குத் திறைசேரிப் பிரதிச் செயலாளரினல் கொடுபட வேண்டிய தொகை ரூபா 28,52,993. ஆனல் திறைசேரிப் பிரதிச் செயலாளர் வரவு வைத்தது ரூபா 34,50,000 ஆகும். கூடுதலாகக் கொடுபட்ட ரூபா 5,97,007 திரட்டு நிதிக்கு 1971 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் மீளளிக்கப்பட்டது.

**கொடுப்பனவு.**—உதவுநர்க்குக் கொடுக்கப்பட்ட கொடைகள் ரூபா 24,81,475; மேற்குறிப்பிட்ட ரூபா 24,81,475 இல் ரூபா 72,498 பெறுமதியான ரூபா 358 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 1972 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15 ஆந் திகதிவரை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**பொது**

6. **அறவீட்டுப் பதிவேடுகள்.**—திணைக்களங்களினும், திணைக்களங்களின் கணக்குப் பிரிவுகளினும் கணக்குகள் கணக்கிணக்கஞ் செய்யப்பட்ட ஒவ்வோர் நிதியாண்டின் உதவுநர் அறவீட்டுப் பதிவேடுகள் யாவும் தொடர்ந்து வரும் நிதியாண்டின் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு அரசாங்க சேவைச் சகாயநிதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டுமெனப் பிரமாணத்தின் கீழ் வகுக்கப்பட்ட 9 (10) வது இலக்கச்சட்ட விதி கூறுகின்றது. ஆனல் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த 1961–62 தொடக்கம் 1964–65 வருடங்களுக்கான நான்கு அறவீட்டுப்பதிவேடுகள் 1972 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1 ஆந் திகதிவரை அரசாங்க சேவைச் சகாயநிதி அலுவலகத்திற்கு வந்தடையவில்லை.

அரசாங்க சேவைச் சகாயநிதிப் பிரமாணத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதி 8 (5) இன் பிரகாரம் ஒவ்வோர் நிதியாண்டு முடிவிலும் அந்நிதியாண்டில் திணைக்களங்களாலும் மற்றும் அவற்றின் கணக்குப் பிரிவுகளாலும் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு வரவு வைக்கப்பட்ட தொகை அவ்வத்திணைக்களங்களினல் சமர்ப்பிக்கப்படும் அவ்வருட அறவீட்டுப் பதிவேடுகளில் காணப்படும் தொகைகளுடன் கணக்கிணக்கஞ் செய்யப்படல் வேண்டும். ஆனல் மேற்கூறிய அறவீட்டுப் பதிவேடுகள் இல்லாதவிடத்து இம்முறை செயற்படுத்தப்படவில்லை.

8. **உதவுநரின் தனிக்கணக்குகள்**—உதவுநர்க்கான தனிக் கணக்குகள் இந்நிதியால் பேணப்படவில்லை. உதவுநர்க்கு அவர்களது கணக்கில் இருக்கும் மிகுதித் தொகையைக் கொடுக்கப்படும் பொழுது தான் இக்கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய நிலையில் ஓர் திகதியில் ஓர் உதவுநரின் கணக்கின் மீது இருக்கும் தொகையை நிர்ணயிக்க முடியாது உள்ளது.

தனிக்கணக்குகள் இல்லாதவிடத்து, ஓர் நிதிவருட முடிவில், பேரேட்டில் காணப்படும் உதவுநர் தொகைக்கணக்கின் தொகையுடன் அத் திகதியில் உதவுநரின் தனிக்கணக்குகள் மீது இருக்கும் கூட்டுத் தொகையினை செம்மையாக்கல் செய்யவியலாது உள்ளது. அதேபோன்று ஒரு வருடத்தில் ஒவ்வொரு உதவுநர்க்கும் அளிக்கப்பட்ட வட்டியைக் கூட்டிவரும் தொகையை அந்த வருடத்தில் வருமான ஒதுக்கீட்டுக் கணக்கில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையுடன் செம்மையாக்கல் செய்யவியலாதுள்ளது.

9. **உதவுநர்க்குத் தகவல்.**—ஒவ்வோர் நிதிவருட முடிவிலும், ஒவ்வோர் உதவுநர் கணக்கினுமுள்ள மீதிகளை உதவுநர்க்கு திறைசேரிப் பிரதிச் செயலாளர் அறிவிக்க வேண்டுமென அரசாங்க சேவைச் சகாயநிதிப் பிரமாணத்தின் 25 ஆம் பிரிவு கூறுகிறது. இந்நிதி தொடக்கப்பட்ட 1942 ஆம் ஆண்டு தொடக்கம் இத்தேவையை எந்த வருடத்திற்காயினும் செயற்படுத்தப்படவில்லை. இச்சட்ட மீதியான தேவையைப் பேணுவதற்கு உதவுநரின் தனிக்கணக்குகள் கூடிய சீக்கிரம் பேணப்படுதல் வேண்டும்.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு 7,
1972 ம் ஆண்டு மே மீ 16 ந் உ.

சி. சிவபாதசுந்தரம்,
கணக்காய்வுத் தலைமையதிபதிக்காக.

**அனுபந்தம் " அ "**

**1967–68 ஆம் நிதிவருட அரசாங்க சேவைச் சகாயநிதியின் கணக்கு மீதான கணக்காய்வுத்தலைமையதிபதியின் அறிக்கைபற்றி, நிர்வாக சபையில்**

**விதப்புரைகள்**

| | | |
|---|---|---|
| பந்தி 1—4 வரை | .. | விபரங்கள் தெரிவிப்பன. |
| பந்தி 5 | .. | கொடுப்பனவுச் சீட்டுக்களை உரிய திணைக்களங்களிடமிருந்து பெற்று அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கொடுப்பனவுச் சீட்டுக்களின் மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து, அக்கொடுப்பனவுகளை நிரூபிப்பதற்கான தொடர்புள்ள சாதனங்கள் கணக்காய்வாளருக்கு அளிக்கப்படும். |
| பந்தி 6 | .. | கொழும்பு தெற்கு கல்வியதிபதியிடமிருந்து கிடைக்காமலிருந்த 1961/62 தொடக்கம் 1964/65 ஆம் ஆண்டு வரைக்கான உதவுநர் அறவீட்டுப் பதிவேடுகள், தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன. |
| பந்தி 7 ம், 8 ம் | .. | கொம்பியூற்றர் மூலம் கணக்கு வைப்பதற்கான முறைபற்றி தற்பொழுது ஆராயப்படுகின்றது. |

டபிள்யூ. சந்திரசேன,
செயலாளர்.

லெஞட் பனம்பலன,
நிர்வாக சபைத்தலைவர்.

அ. சே. சகாயநிதி அலுவலகம்,
லொயிட்ஸ் கட்டடம்,
கொழும்பு 1,
1972 ம் ஆண்டு நவெம்பர் மீ 13 ந் உ.

1–107

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)**

277 (3) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல்

மங்கள ருவர்ஸ் லிமிரட் கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 16.7.1962 இல் கூட்டப்பெற்ற மங்கள ருவர்ஸ் லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாயமான காரணம் இருத்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாதவிடத்து, கம்பனிகள் பதிவாளராகிய ருவான்புர விக்மன் டி சில்வா ஆகிய நான், கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) 277 (3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியில் இருந்து 3 மாத இறுதியில் மங்கள ருவர்ஸ் லிமிரட் இன் பெயர் இத்திணைக்களத்தில் இருக்கும் கம்பனிகளின் பதிவேட்டில் இருந்து நீக்கப் பெற்று, குறித்த கம்பனி குலைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

ரு. வி. த சில்வா,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந் உ.

1–86

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

### 01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

## "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (கெசற்)"

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணியோடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக கைப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க உதவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைவு .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—

| குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. | உள்ளூர் ச. | வெளியூர் ரூ. | வெளியூர் ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 48 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடைக் கூடியதுமான கால எல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. | விலை ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அத்தியட்சர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்றுக்கொள்ளும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | 05.01.73 | வெள்ளி | 29.12.72 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.01.73 | வெள்ளி | 05.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.01.73 | வெள்ளி | 12.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.01.73 | வெள்ளி | 19.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| பெப்புருவரி | 02.02.73 | வெள்ளி | 26.01.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 09.02.73 | வெள்ளி | 02.02.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 15.02.73 | வியாழன் | 09.02.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.02.73 | வெள்ளி | 15.02.73 | வியாழன் | ந.ப. 12.00 |
| மாச்சு | 02.03.73 | வெள்ளி | 23.02.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 09.03.73 | வெள்ளி | 02.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.03.72 | வெள்ளி | 09.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.03.73 | வெள்ளி | 16.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.03.73 | வெள்ளி | 23.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் | 06.04.73 | வெள்ளி | 30.03.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11.04.73 | புதன் | 06.04.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.04.73 | வியாழன் | 11.04.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.04.73 | வெள்ளி | 19.04.73 | வியாழன் | ந.ப. 12.00 |

எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.